செ.வெ.எண்.'29

நாள்: 14.12.2017

தேதி : .12.2017
இடம் : உதகமண்டலம்

## பத்திரிக்கை செய்தி

நீலகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தில் அனலாக் முறையிலான ஒளிபரப்பிற்கு கேபிள் டிவி கட்டணத்தை உரிய தேதிக்குள் செலுத்தத் தவறிய உள்ளூர் கேபிள் ஆப்ரேட்டர்களுக்கு அபராதத் தொகை விதிக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து பல உள்ளூர் கேபிள் டிவி ஆப்ரேட்டர்கள் தங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள அபராதத் தொகையை தள்ளுபடி செய்தால் செலுத்த வேண்டிய அசல் சந்தா கட்டணத்தை முழுவதுமாக ஒரே தவணையில் செலுத்திவிடுவதாக தமிழக அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளனர். அதன்படி சில நிபந்தனைகளுக்குட்பட்டு அபராதத் தொகையை தள்ளுபடி செய்வதற்கு அபதாரத் தொகை தள்ளுபடி – 2017 திட்டம் செயல்படுத்தஉப்பட உள்ளது.

இத்திட்டத்தின் கீழ் அசல் நிலுவைத் தொகை முழுவதையும் ஒரே தவணையில் திருப்பி செலுத்தும் உள்ளூர் கேபிள் டிவி ஆப்ரேட்டர்கள் அனைவருக்கும் அக்டோபர் 2017 மாதம் முடிய உள்ள அபதாதத் தொகை முழுவதுமாக தள்ளுபடி செய்யப்படும். நிலுவையில் உள்ள அசல் சந்தா தொகை முழுவதையும் ஒரே தவணையில் ஆன்லைனில் மூலம் 05.12.2018க்குள் ஒரே தவணையாக செலுத்திட வேண்டும். 5.1.18

நிலுவையில் உள்ள அசல் சந்தா தொகை மற்றும் அபராதத் தொகை விபரம் ஆப்ரேட்டர்களின் Login-ல் தெரிவிக்கப்படும். நிலுவையில் உள்ள அசல் சந்தா தொகையை ஒரே தவணையில் செலுத்திய உள்ளூர் கேபிள் டிவி ஆப்ரேட்டர்களுக்கு அபராதத் தொகை தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. என்று சான்ற ஆன்லைன். தபால் மூலமாக தெரிவிக்கப்படும். இந்தா சலுகை ஒரே ஒரு முறை தான் வழங்கப்படும். எனவே இந்த வாய்ப்பினை கேபிள் டிவி அப்ரேட்டர்கள் பயன்படுத்தி அசல் நிலுவைத் தொகையை செலுத்தி பயனடையுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர்
நீலகிரி மாவட்டம்